ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2206/18 - 2020 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.12.18

*2206/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிய 1974/ 15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதிய 1714/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஷங்கிரி-லா ஹொட்டேல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக, இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :-*

*2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிய 1974/ 15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதிய 1714/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகம், கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கெனப் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

*"(4) மேற்கூறப்பட்ட "மேல் மாகாணத்தில் கொழும்பு 1, கோட்டையில் உயர்தர வதிவிடங்களும் உயர்முனைக் கடைத்தொகுதியும் உட்பட, கலந்த பாவனைக் கட்டிடத் தொகுதியாக ஆடம்பர ஹோட்டலொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியன்று வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்குதல் வேண்டும்."*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, திசெம்பர் 18.*

*01-619*